
100 நாள் வேலை புதிய சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல்

# கிராமப்புற மக்களின் முதுகெலும்பை முறிக்கும் மோடி அரசு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி கடும் கண்டனம்!



சென்னை, மார்ச் 12-

"100 நாள் வேலை புதிய சட்டத்தை நிறைவேற்ற எந்த நடவடிக்கையையும் மோடி அரசு எடுக்கவில்லை! கிராமப்புறத்தின் முதுகெலும்பை முறிக்கும் மோடி அரசின் வஞ்சகத்திற்கு, துணை போகும் பழனிசாமியின் பச்சைத் துரோகத்திற்குத் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள்" என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான பிரதமர் மன்மோகன் ஆட்சியில், 2006ல் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில், 100 நாள் வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கோடிக் கணக்கான கிராம மக்கள் பயன் அடைந்து வந்தார்கள். கிராமப் புறத்தில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் 18 வயது நிரம்பிய ஒருவருக்கு ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது சட்டப்படி உரிமையாக்கப்பட்டது.

### குறைத்து நிதி ஒதுக்கப்பட்டது!

வறுமை ஒழிப்புத் திட்டமான 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை மோடி ஆட்சிக்கு வந்தும் படிப்படியாக அழிக்க ஆரம்பித்தார். திட்டத்துக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டினார்கள். 2021-2022 ல் 98,468 கோடி ரூபாய் ஒதுக்கிய நிலையில் 2022-2023ல் 73,000 கோடி ரூபாயும் 2023-2024ல் 60 ஆயிரம் கோடி ரூபாயும் என ஆண்டு தோறும் குறைத்து நிதியை ஒதுக்கி வந்தார்கள். இந்தப் பற்றாக்குறையால் ஆண்டுக்குச் சராசரியாக வெறும் 40 நாட்கள் வேலை மட்டுமே என்ற நிலை உருவானது. இதனால், கிராமப்புறத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

100 நாட்களுக்கு அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்றால் ரூபாய் 2.72 லட்சம் கோடி தேவை. ஆனால், அதற்குரிய நிதியை ஒதுக்காமல் மோடி அரசு வஞ்சித்தது. 2023 2024ல் ஒதுக்கப்பட்ட தொகையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.198 சதவீதம்தான். இந்தத் திட்டத்தில் 100 நாட்கள் கிடைத்த வேலை, மோடி ஆட்சியில் 30 நாட்கள் கூட கிடைப்பதில்லை. 2021ம் ஆண்டு முதல் 7.6 கோடி தொழிலாளர்களின் நூறு நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டப் பணி அட்டைகள் நீக்கப்பட்டன.

இப்படி மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு வாய்ஜாலங்களுடன் 'விபி கிராம் ஜி' எனும் புதிய சட்டத்தை எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே கொண்டு வந்தது.

### நாடாளுமன்றத்தில் தி.மு.க. கடும் எதிர்ப்பு!

கிராமப்புற ஏழை மக்களுக்கு நூறு நாள் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதும், தேசப்பிதா காந்தியாரின் பெயரை நீக்குவதும்தான் பா.ஜ.க. அரசின் ஒரே நோக்கம் என்பதை முதலமைச்சர் அவர்கள் பல முறை சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட போது அதற்குக் கடுமையான எதிர்ப்பை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்தார்கள்.

இந்தப் புதிய சட்டத்தால் 125 நாட்கள் வேலை கிடைக்கும், மக்கள் கூடுதலாகப் பயன் பெறுவார்கள் என்றெல்லாம் சமாளிப்பு பதில்களைக் கூறிக் கொண்டிருந்த ஒன்றிய பாஜக அரசு, இதுவரை இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான எந்த ஆக்கப்பூர்வ நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சட்டத்தை எவ்வாறு செயல்படுத்தப் போகிறோம்? என்ற எந்தவொரு செயல்திட்டத்தையும் அறிவிக்காமல் கிடப்பில் போட்டு வைத்துள்ளது.

ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்த இருக்கிற இந்தச் சட்டத்திற்கான அடிப்படை விதிகளையே இன்னும் வகுக்காமல் ஒன்றிய அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகின்றது. மாநிலங்களுக்கு எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும் என்பதற்கான எந்தத் தெளிவான வழிகாட்டலும் இன்னமும் வகுக்கவில்லை. கிராம ஊராட்சிகளை எந்த அளவுகோல்களின் அடிப்படையில் தரம் பிரிப்பது என்பதும் இறுதி செய்யவில்லை.

### வேலை வாய்ப்பு உரிமையை பா.ஜ.க. பறிக்க முயல்கிறது!

புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், அதை நிறைவேற்றுவதற்கான எந்த நடவடிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்காததைப் பார்க்கும் போது கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பு உரிமையை பா.ஜ.க. அரசு முற்றிலும் பறிக்க முயல்வது அப்பட்டமாகத் தெளிவாகிறது. விபிகிராம் ஜி சட்டத்திற்கு இதுவரை ஒன்றிய அரசு செய்தது விபிகிராம் ஜி திட்டத்திற்கு 50 ஆயிரம் ரூபாயில் லோகோ உருவாக்கியது மட்டுமே.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் சட்டத்தால் கிடைத்த பலன்கள் கூட விபிகிராம் ஜி சட்டத்தால் கிடைக்காத போதும், புதிய சட்டத்தைக்கூட அமல்படுத்த மோடி அரசு தயங்குகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது 100 நாள் வேலைத் திட்டத்தையே முற்றிலும் ஒழித்துக் கட்டும் முடிவில் மோடி அரசு இருப்பதையே இன்றைய செயல்பாடுகள் காட்டுகின்றன.

### 12 கோடி கிராமப்புற தொழிலாளர்கள் பாதிப்பு!

வாயில் நுழையாத வட மொழி பெயர் கொண்ட விபிகிராம் ஜி திட்டத்தில் மாநிலங்களின் மீது கூடுதல் நிதிச் சுமையை ஏற்றியிருக்கிறார்கள். 'வேலை என்பது அடிப்படை உரிமை' என்ற நிலையிலிருந்து 'தேவை அடிப்படையில் வேலை' என மாற்றம் செய்யப்பட்டது. 100 சதவிகித ஒன்றிய அரசின் நிதிப் பங்கீடு என்பதை 60:40 என மாற்றி மாநிலங்கள் மீது கூடுதல் நிதிச் சுமை சுமத்தப்பட்டுள்ளது. கிராமங்களை மீண்டும் வறுமையின் பிடியில் தள்ளும் புதிய திட்டத்தால் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் ஒரு கோடி கிராமப்புற மக்களுக்கு வேலை கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் 12 கோடி கிராமப்புற தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள். நூறு நாள் வேலைத் திட்டத்திற்குரிய ஊதியத்திற்கான நிதியை ஒன்றிய அரசு வழங்காத போதெல்லாம் அந்த உரிமைக்காகச் சட்டப்பூர்வமாகவும் மக்கள் மன்றத்திலும் தி.மு.க. போராடியது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாடு தழுவிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது

### பழனிசாமியின் பச்சைத் துரோகம்!

ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமியோ இந்த அநீதிக்கு வக்காலத்து வாங்கி தமிழ்நாட்டுக்குத் துரோகத்தைச் செய்தார். கிராமப்புற மக்களின் வயிற்றில் அடிக்கும் புதிய சட்டத்தை ஆதரித்து தனது துரோகப் பணியைச் செவ்வனே செய்து முடித்த பழனிசாமி, தான் ஆட்சிக்கு வரப்போவதில்லை என்பதும் தெரிந்தும் 150 நாட்களாக வேலையை உயர்த்துவேன் என நாடகமாடிக் கொண்டிருக்கிறார். புதிய சட்டத்தை ஒன்றிய அரசு உடனே அமல்படுத்த வேண்டும் என்று கூடச் சொல்ல பழனிசாமிக்கு துணிவில்லை. நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வரும் வஞ்சகத்திற்கும் பழனிசாமியின் பச்சைத் துரோகத்திற்கும் மிக விரைவில் தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஐ. பெரியசாமி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

# ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் - நங்கநல்லூரில் நிழற்குடை திறப்பு!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைக்கிறார்! என். சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை, மார்ச்.12

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் 12வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியோடு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.95 லட்சம் மதிப்பீட்டில் நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயில் நிழற்குடை திறப்பு விழா இன்று (12.03.2026) வியாழக்கிழமை, காலை 7.30 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி .கே. சேகர்பாபு கலந்து கொண்டு நிழற்குடையை மக்கள் பயன்பாட்டிற்கு சிறந்து வைக்கி றார்.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதி கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் 12வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!



**இன்று 12,03,2026 நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!**
**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**



சென்னை, மார்ச்.12-

அமைச்சர்-மாவட்டச்செயலாளர்பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:

**மனிதநேயம் - 14**

### நெஞ்சுரம் கொண்ட முதல்வர்! நிகரற்ற கொள்கை தலைவர்!

**நாள்: 12.3.2026, வியாழக்கிழமை, மாலை: 6.00 மணி**

**இடம்: அரிச்சந்திரா மைதானம், ஜி.கே.எம்.காலனி**

**தலைமை:** N. **திலிப்குமார்,** பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்

வாழ்த்துவோர்

**திரைக்கலைஞர். வைகைப்புயல் வடிவேலு**

**திரைக்கலைஞர் நாசர்** (இயக்குநர் - திரைப்படநடிகர்)

**பேராசிரியர். பர்வீன் சுல்தானா**-மதுரை உலகத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர்

**அன்புடன்: பகுதி இளைஞர் அணி**
**கொளத்தூர் மேற்குப்பகுதி**

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா–38அ, தொடரும் வெற்றி முடிசூடும்! சூரியத் தலைவர் புகழ் பாடும்! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற புகழரங்கத்தில் வேந்தர் – வி.ஐ.டி. பல்கலைக்கழகம் முனைவர் கோ.விசுவநாதன், ஆசிரியர் தினமணி –வைத்தியநாதன், புதுக்கோட்டை கவிஞர் தங்கம் மூர்த்தி, தேர்வாணையக்குழு மேனாள் உறுப்பினர் லட்சுமணன் ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இந்த வாழ்த்தரங்கில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

பெரம்பலூரில் — சமூக நீதிக் காவலர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு விழா!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - விழா மலரை வெளியிட்டு - பேருரை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – ஆ.ராசா எம்.பி. – தொல். திருமாவளவன் எம்.பி. – கே.என்.அருண் நேரு எம்.பி. பங்கேற்பு!



பெரம்பலூர், மார்ச் 12

சமூக நீதிக் காவலர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் மலர் வெளியீட்டு விழா செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில், பெரம்பலூர், பாலக்கரையில் இன்று (12.3.2026 வியாழக்கிழமை) நடைபெறுகிறது. இதில் கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து நூற்றாண்டு மலரை வெளியிட்டு, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் ந.மிருணாளினி வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

பெரம்பலூர் பாலக்கரையில் சமூக நீதிக் காவலர் வே.ஆனைமுத்து அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டு கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. முன்னிலை வகிக்க, போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை ஆற்றுகிறார்.

மேலும் இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., கே.என்.அருண் நேரு எம்.பி., ம.பிரபாகரன் எம்.எல்.ஏ., க.சொ.க. கண்ணன் எம்.எல்.ஏ., கு.சின்னப்பா எம்.எல்.ஏ., ஆரூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்துகின்றனர். மேலும் இதில் புலவர் செந்தலை கவுதமன், ஆனை பன்னீர்செல்வம், அம்பிகா இராஜேந்திரன், வி.ஜெக தீசன், து.ஆதவன், ஏ.சங்கீதா, அ.ஜாகிர் உசேன், ர.வள்ளியம்மை, இரா.பாக்யலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி நன்றியுரை கூறுகிறார்.

---

### தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 162 | மே.பொ / சி.பரா / வ.செ.அ.மி.நி-1 | Providing potable water for domestic water purpose to Athipattu camp at NCTPS-I |
| 390 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Re-Heater and super heater spray station control valve for Unit-II |
| 395 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Centre Coal Feed Pipe Type II for HP 803 Bowl Mills in Unit II |
| 313 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of S188 model plate heat exchangers channel plate for SG PHE 2D |
| 316 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply of Spares for safety valves of boiler drum super heater HRH and CRH safety valves |
| 318 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply of Water wall screen tubes and Bend LTSH Middle Bank Eco Horizontal Support Tube suitable for |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/1729/ஒப்பந்தப்புள்ளி/2026**

---

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## சென்னை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!**

சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர்களாக **எஸ். மார்ட்டின்,** (478, 9வது தெரு, சாஸ்திரி நகர், வியாசர்பாடி, சென்னை - 600039.), **தன்வீர் அகமத்,** (9-5, பார்த்தசாரதி நகர், 9வது சந்து, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600021), **எஸ். லிவிங்ஸ்டன்,** (3ஏ, கருணாநிதி தெரு, கொடுங்கையூர், சென்னை - 600118) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 11-03-2026.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

---

தி.மு.க. மாணவர் அணி

## நிரப்பப்பட வேண்டிய மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!**

திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **பா. சதீஷ்குமார்** (5, கணேசன் தெரு, ஒண்டிகுப்பம், மணவாள நகர், திருவள்ளூர்) அவர்களும்;

விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **டி.எம். பிரித்திவ்** (313/5, நேரு வீதி, பூந்தோட்டம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்) அவர்களும்;

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **ரா. அரங்கநாதன்** (131, நடுத் தெரு, வீரமூர் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.) அவர்களும்;

இராமநாதபுரம் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக **ஆர்.கே.கே. கார்த்திக்,** (59/4, குட்ஸ்சட் தெரு, அண்ணா நகர், இராமநாதபுரம் மாவட்டம்), **என்.டி.முகேஷ்குமார்** (12ஏ/1, மார்கெட் தெரு, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோரும் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 11-03-2026.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றியம் பெரியகடம்பூர் கிராமத்தில் பாமக கட்சியை சார்ந்த 50க்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள்.